***நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்***

**முன்னிலை திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,**
**நீதித்துறை நடுவர்**
**அம்பத்தூர்**
**2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**குற்ற பல்வகை மனு எண்.3588/2022**

திரு. எம்பார் சீனிவாசன் ரவி

த/பெ.எம்பார் ரங்கசாமி சீனிவாசன் (லேட்),

எண்.1701 சில்வர் ஓக், அலையன்ஸ் ஆர்ச்சிட் ஸ்பிரிங்ஸ்,

54, வாட்டர் கேனால் ரோடு, கொரட்டூர்

சென்னை - 600 080 ......... மனுதாரர்/புகார்தாரர்

//எதிர்//

அரசுக்காக,

1. காவல் ஆய்வாளர்

T-3 கொரட்டூர் காவல் நிலையம்

கொரட்டூர்.

2. காவல் ஆணையாளர்,

ஆவடி காவல் ஆணையரகம்,

ஆவடி, தமிழ்நாடு .........எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

1. திரு.கணேசன் விஸ்வநாதன் .........எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது 06.10.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.M.மிருதுன்ஜெயன், மற்றும் திரு.K.V.சண்முகசுந்தரம்,

ஆகியோர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம வழங்கும்....

## உத்தரவு

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கை புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி சட்டப்பிரிவு 175(3) BNSS (கு.வி.மு.ச.பிரிவு 156(3)இன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) மனுவின் சுருக்கம்

(a) இவ்வழக்கின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு தெரிந்த நபர் என்பதாலும், எதிர்மனுதாரர் செய்து வரும் தொழிலுக்கு உதவியாக அவரது சொத்துக்களை விற்பனை செய்வதற்கு உதவுவதாகவும், வாக்குறுதி அளித்ததன் பேரில் எதிர்மனுதாரர் குழந்தைகளின் கல்வி கட்டணத்திற்காகவும், அவரது நிதி பாரத்தை குறைப்பதற்காகவும், தனி நபர் கடன் கேட்டதன் பேரில் கடந்த 11.07.2019 அன்று வட்டியில்லாத தனி நபர் கடனாக மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ.5,00,000/- வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(b) எதிர்மனுதாரர் மேற்கண்ட கடனை கூறியபடி திருப்பி செலுத்தாததால் எதிர்மனுதாரர் மீது மனுதாரர் டி-3 கொரட்டூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் மேற்கண்ட காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எதிர்மனுதாரர் மனுதாரரை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்கண்ட கடன் தொகையை பெற்றுக் கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும், எனவே எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ள டி-3 கொரட்டூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை

இவ்வழக்கு மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனு சங்கதிகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடுவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளதா? என்பதும் இவ்வழக்கு மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதுமேயாகும்.

## 3) தீர்வு

(i) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு மனு மற்றும் மனுவுடன் இணைந்த ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில் இவ்வழக்கில் எதிர்மனுதாரர்/ எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முதல் தோற்ற வழக்கும், போதிய முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(ii) மனுதாரர்/புகார்தாரரிடமிருந்து இவ்வழக்கின் எதிர்மனுதாரர்/எதிரி ரூ.5,00,000/- தனிநபர் கடன் பெற்று அதை கூறியபடி திருப்பி செலுத்தாமல் தலைமறைவாகி விட்டதாகவும் எனவே, மனுதாரர்/புகார்தாரர், எதிர்மனுதாரர்/எதிரிக்கு எதிராக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது மனுதாரர்தரப்பு மனுவின் சங்கதிகளிலிருந்தும், பிரமாண வாக்குமூலத்திலிருந்தும் தெரிய வருகிறது.

(iii) மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் வழக்கு மனு சங்கதிகள் குறித்து உரிமையயில் தீர்வுகாண வாய்ப்பு வசதிகள் இருந்தும் மனுதாரர்/புகார்தாரர் அவ்வாறு உரிமையியல் தீர்வுகள் ஏதும் காணாமல் மனுதாரர்/புகார்தாரர் எதிர்மனுதாரர்/எதிரியிடம் கொடுத்த கடனை வசூல் செய்யும் பொருட்டு முறையற்ற வகையில் ஆதாயம் அடைவதற்காக மேற்கண்ட உரிமையயியல் சங்கதிகளைக் கொண்டு மேற்கண்ட வழக்கை குற்ற வழக்காக மாற்ற முயற்சித்துள்ளார் என்பது மனுதாரர்தரப்பு மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலிருந்து உறுதியாகிறது.

(iv) மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும், வழக்கு மனுவையும் பரிசீலனை செய்யும் போது மாண்புமிகு உச்சநீதிமன்றம் Lalitha Kumari VS State of Uttar Pradesh வழக்கில் வழிகாட்டுதலின் படி இவ்வழக்கு மனுவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான முதல் தோற்ற வழக்கும், போதிய முகாந்திரமும் இல்லையென இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(v) எனவே, வழக்கு மனுவின் சங்கதிகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடுவதற்கு எவ்வித முதல் தோற்ற வழக்கும், முகாந்திரமும் இல்லை என நீதிமன்றம் தீர்மானிப்பதுடன் இவ்வழக்கு மனுவை தனிப்புகாராக கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்வதற்கும் எவ்வித முகாந்திரமும் இல்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

4. <u>**முடிவாக**</u>

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பார்வையிட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(திரு.P.ஜெய்சங்கர்)
நீதித்துறை நடுவர்
அம்பத்தூர்.

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
அம்பத்தூர்.